**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 123/2003**

2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 16ம் நாள் செவ்வாய் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய DW2 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **மீனா** | **தொழில் :** | வட்டார கல்வி அலுவலர் |
| **கணவர் பெயர் :** | **கலியபெருமாள்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | பட்டுக்கோட்டை | **வயது** | 57 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**16.06.2026**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன், இந்த வழக்கில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் 2ம் பிரதிவாதி ஆவார். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக 2ம் பிரதிவாதி சார்பில் சாட்சியம் அளிக்க 2ம் பிரதிவாதி கொடுத்த உத்தரவு **பி.வா.சா.ஆ. 5** ஆக குறியிடுகிறேன். மேலும் 10.03.2003 முதல் 18.02.2004 க்கான நகராட்சி தொடக்க பள்ளி SSA திட்டத்தின்படி 2 வகுப்பறை கட்டிடம், கழிவறை, குடிநீர் தொட்டி ஆகியவைகள் கட்டி முடித்ததற்கான வரவு செலவு விவர பதிவேடு நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **பி.வா.சா.ஆ.6** ஆக குறியிடுகிறேன். ஜீன் 2002 முதல் 2024–2025 வரை மாணவர்களின் பள்ளி சேர்க்கை பதிவேடு நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **பி.வா.சா.ஆ. 7** ஆக குறியிடுகிறேன். ஜீன் 2002 முதல் 2026 வரையிலான மாணவர்களின் வருகை பதிவேடு நகல் (அசலுடன் ஒப்பிட்டு

குறியிடப்படுகிறது) **பி.வா.சா.ஆ. 8** ஆக குறியிடுகிறேன். ஜீன் 2002 முதல் 2026 வரையிலான ஆசிரியர்களின் வருகை பதிவேடு நகல் (அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **பி.வா.சா.ஆ. 9** ஆக குறியிடுகிறேன். சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவர்களின் பதிவேடு அசல் **பி.வா.சா.ஆ. 10** ஆக குறியிடுகிறேன். இலவச சத்துணவு திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட முன்மொழி அறிவிப்பு அசல் **பி.வா.சா.ஆ. 11** ஆக குறியிடுகிறேன். மாவட்ட ஆட்சியர் பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு புதிய சத்துணவு மையம் தொடங்க கொடுக்கப்பட்ட கருத்து கோருதல் கடிதம் அசல் **பி.வா.சா.ஆ. 12** ஆக குறியிடுகிறேன். வாதி வழக்கை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்ய பிராத்திக்கிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

S/d.Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.